IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 14 /2011

Deposition of witness for PW2

Name : ஜெயகுமார்

Father's Name : மகாலிங்கம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 29 day of January, 2020.

Cross Examination

நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை. என்னை சாட்சி சொல்ல வழக்கறிஞர் தான் அழைத்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல தெரியும். இந்த வழக்கில் ராமமூர்த்தியின் தகப்பனார் பெயர் சின்னய்யகவுண்டர் என்றால் சரிதான். சின்னய்யகவுண்டரின் முதல் மனைவிக்கு பிறந்த மக்கள் தான் எனது தகப்பனாரும், வாதி ராமமூர்த்தியும் மற்றும் கௌரியம்மாள் என்றால் சரிதான். கௌரியம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னய்யகவுண்டரின் இரண்டாவது மனைவி பெயர் லட்சுமியம்மாள் என்றால் தெரியாது. இரண்டாவது மனைவிக்கு பிறந்த மகன் தான் 1ம் பிரதிவாதி பார்த்திபன் என்றால் தெரியாது. எனது சித்தப்பா ராமமூர்த்திக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பார்த்திபன் எனக்கு சித்தப்பா மகன் அண்ணன் முறை வேண்டும் என்றால் தெரியாது. எனது ஊரைச்சேர்ந்தவர். இதுவரை அவரை யார் என்று தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பார்த்திபன் பயிர் வைத்த விவரம் எனக்கு தெரியும். அவர் காங்குப்பம் கிராமத்தில் பயிர் வைத்து விவசாயம் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். அவரது சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எனது சித்தப்பாவின் சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. வாதி பெயரில் 2 ஏக்கர் 54 செண்ட் உள்ளது. அந்த சொத்து காங்குப்பம் கிராமத்தில் வாதி பயிர் செய்து அவரது அனுபவத்தில் உள்ளது. அவரது பட்டா, சிட்டா, அடங்கல் ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு வாதி

வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் அவரது சொத்து அவருக்கு வேண்டும் என்று கேட்டுள்ளார். நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் விளம்புகை செய்தும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வாதி வழக்கு தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு சொன்னதற்கு என்ன பொருள் என்று கேட்டால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. வழக்கறிஞர் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை. சாட்சி தற்பொழுது நிரூபணவாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேனா என்று ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் கையெழுத்தை நீதிமன்றத்தில் வந்து வைத்தேனா அல்லது வழக்கறிஞரின் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தேனா என்று கேட்டால் நீதிமன்றத்தில் வந்து கையொப்பம் செய்தேன். வழக்கறிஞர் தயார் செய்து வந்த நிரூபணவாக்குமூலத்தில கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் என்றால் தெரியாது. Plaintiff and Defendant என்றால் தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ராமமூர்த்தி எனது சித்தப்பா மகன் என்பதால் அவருக்கு எதிராக எனது சித்தப்பாவிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரவாதி பார்த்திபன் எனது உடன் பிறந்த சகோதரரின் மகன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.